# THE FXEC TIMES

Empowering your Future

தமிழ்

மலர் - 1

இதழ் - 8

டிசம்பர் 2022

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/




24 மணி நேரம் ஹேக்கத்தான் போட்டி!
நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு பாராட்டு!




முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக
விழாவில் மாணவிகள் நடனம்




ஸ்டார்ட் அப் ஹேக்கத்தோன் போட்டியில் வெற்றி
பெற்ற மாணவர்கள்

# நெல்லை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழா!

## நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு பங்கேற்பு!




**முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழாவில் நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு உரையாற்றினார்**

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்கள் அறிமுக விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இந் நிகழ்ச்சியை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். கல்லூரி முதல்வர் முனைவர் வேல்முருகன் வரவேற்புரையாற்றினார். ஸ்காட் பள்ளிகளின் தாளாளர் C.பிரிய தர்ஷினி அருண் பாபு, சிறப்பு விருந்தினர் ஜான்ஸ் கல்லூரி முன்னாள் முதல்வர் முனைவர் ஜான் கென்னடி வேதநாதன் ஆகியோர் பங்கேற்றனர்.

இதனையடுத்து கல்லூரியின் அனைத்து துறை தலைவர்களும் முதலாம் ஆண்டு மாணவர்களை வரவேற்று பேசினர். கல்லூரியில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சி, இண்டஸ்ட்ரி விசிட், வேலை வாய்ப்புக்கான இன்டர்ன்ஷிப், தேசிய போட்டிகளில் பங்கேற்பு குறித்து பேசினர்.

இதனை தொடர்ந்து கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் மாண வர்கள் பேசுகையில், கல்லூரியில் பயிலும்போதே அதிக சம்பளத்தில் வேலைவாய்ப்பு பெற்ற நிகழ் வினையும், கல்லூரி நிர்வாகத்தின் சிறந்த கல்வி மற்றும் பேரா சிரியர்களின் பயிற்சியைப் பற்றி எடுத்துரைத்தனர். அடுத்ததாக கல்லூரியின் ஆய்வகங்கள் மூலம் மாணவர்களுக்கு செயல் திறன் அளிக்கப்பட்ட அம்சங்களையும் அவர்கள் கூறினர்.

பொது மேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ண குமார், கணினித் துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக் ஆகியோர் மாணவர்களுக்கு கல்லூரியின் சிறப்பு அம்சங்களை பற்றி எடுத்து ரைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர் முனைவர் ஜான் கென்னடி வேதநாதன் சிறப்புரை யாற்றினார். அப்போது அவர், எப்.எக்ஸ். கல்லுரியில் செயல் முறை பயிற்சியை அளிக் கிறார்கள்.4 ஆண்டுகளில் மாண வர்கள் தங்களது அறிவுத் திறனை வளர்த் துக் கொள்ள உறுதி



**இறை வணக்கத்துடன் மாணவர்கள் அறிமுக விழா**

மொழி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி னார்.தொடர்ந்து பேசிய நிறுவனர் முனைவர் S.கிளிட் டஸ் பாபு, 'எமது கல்வி நிறுவனத்தில் 100 சதவீத வேலை வாய்ப்பு உத்தர வாதத்துடன் சிறந்த கல்வி, பயிற்சி மூலம் பேராசிரியர்கள் கற்றுத் தருகிறார்கள். உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு மாண வர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு தர வேண்டும்.

மாணவர்கள் உயர்ந்த சம்பளத்தில் உயர்ந்த நிலை அடைவதற்கு கடுமையாக உழைக்க வேண்டும். உங்கள் வெற்றி நிச்சயம். இவ்வாறு அவர் கூறினார். கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டி -ருந்த மாண வர்களின்புதிய கண்டு பிடிப்புகளை முதலாம் ஆண்டு மாணவர்களும், பெற் றோர்களும் ஆர்வத்துடன் பார் வையிட்டனர்.

இந்நிகழ்வில் பொதுமேலா ளர்கள் முனைவர் K.ஜெயக் குமார், S.கிருஷ்ணகுமார், கணி னித்துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக், வேலைவாய்ப்புத் துறை டீன் முனைவர் ஞானசரவணன், திறன் பயிற்சி டீன் முனைவர் பாலாஜி, வளாக மேலாளர் பேரா சிரியர் சகாரியா காபிரியல் மற்றும் அனைத்து துறை பேராசிரியர்கள், மாணவர்கள். பெற்றோர்கள் கலந்து கொண் டனர். பேராசிரியர் L.R. பிரியா நன்றியுரையாற்றினார்.



**மாணவிகள் நடனம்**



**அறிமுக விழாவில் பங்கேற்ற மாணவ, மாணவியர் மற்றும் பெற்றோர்கள்**

# 24 மணி நேரம் ஹேக்கத்தான் போட்டி! நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு பாராட்டு!

நெல்லை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் 24 மணி நேரம் நடந்த ஹேக்கத்தான் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் கிளிட்டஸ் பாபு பரிசுகளை வழங்கினார்.

எப்.எக்ஸ். கல்லூரியின் ஐடியேசன் லேப் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை நியூபால்ட்டிக்ஸ் (NeubAltics Tech Pvt.Ltd) நிறுவனத்துடன் இணைந்து 24 மணிநேர தொழில்நுட்ப ஹேக்கத்தான் கண்டுபிடிப்பு போட்டிகளை நிகழ்ச்சி யான நடத்தியது.

இந்த ஹேக்கத்தான் நிகழ்வை ஸ்காட் கல்வி குழும நிறுவன தலைவர் கிளிட்டஸ் பாபு தொடங்கி வைத்தார்.

அந்நிகழ்வில் பேசிய அவர், தனது மாணவர்களை ஊக்கு வித்து, கவனம், கடின உழைப்பு மற்றும் சமூகத்திற்கான தீர்வுகளை வழங்கும் பொறியிய லாளர்களாக சிறந்து விளங்க வேண்டும் என வலியுறுத்தினார்.

பொதுமேலாளர் முனைவர் K.ஜெயக்குமார், பொதுமேலாளர் மற்றும் அப்ளைட் லேப் இயக்குநர் S.கிருஷ்ணகுமார், கணினித் துறை இயக்குநர் S.முகமது சாதிக் கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் ஆகியோர் ஹேக்கத்தான் கண்டுபிடிப்பு அறிக்கைகள் மற்றும் நெறி முறைகளை வெளியிட்டனர். இதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் பங் கேற்றனர். மாணவர்கள் முதல் சுற்றில் தங்கள் கண்டுபிடிப்பு யோசனைகளை முன்வைத்தனர், விவசாயிகளுக்கான விவசாய தீர்வு காண்பதில் கணினித்துறை மாணவர்கள் M.திவ்யா, L.கரோலின் கிரேஸ், B.பிருந்தா முதலிடம் பிடித்தனர். அடுத்ததாக நோயாளிகளுக்கான டயட் பரிந் துரை காண்பதில் சிஎஸ் பிஎஸ், துறை மாணவர்கள் N.ஆறுமுகம் S.பென்னி மற்றும் அதற்கு அடுத்த இடத்தில் உடல்நலப் பராமரிப்பில் தீர்வு வழங்குவதில் ஐ.டி துறை மாணவர்கள் சகாய ர். ரெபினா மற்றும் நிவேதிதா ஆகியோர் வெற்றி பெற்றனர். மேலும் சுற்றுச்சூழல் களத்தில் தீர்வுக்கான சிறப்பு அங்கீகாரம் பரிசினை மாணவர்கள் (சி.எஸ்.பி.எஸ்.) ஆகியோர் பெற்றனர்.


வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு பரிசு வழங்கினார்.

இப்போட்டிக்கான ஆலோசகர் களாக தொழில் நுட்ப வல்லுநர் மற்றும் பயிற்சியாளர் கல்கி சீதாராமன், என்.டி. பி.எல் (NTPL) நிர்வாக இயக்குநர் வினோத் மற்றும் கணினித்துறை முனை வர் ரவி ஆகியோர் செயல் பட்டனர்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ்பாபு ரொக்கப் பரிசுகள், சான்றிதழ்கள், பரிசுகளை வழங்கி பாராட்டினார்.


இந்நிகழ்வில், கணினித்துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், பயன்பாட்டு ஆய்வக ஒருங்கிணைப்பாளர் முனைவர் K.லட்சுமி நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்

இந்தப் போட்டிக்கான ஏற்பாடுகளை முனைவர் T.C. சுப்பு லெட்சுமி, முனைவர் J. சாஜிலின் மற்றும் ஐ.டி. துறை பேராசிரியர்கள் ஆகியோர் செய்திருந்தனர்.

## முதல் ஆண்டு மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை பயிற்சி!

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி முதல் ஆண்டு செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறை சார்பில் மென்பொருள் நிறுவல் அடிப்படைகள் குறித்த பயிற்சி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையைச் சேர்ந்த மாணவர்கள் பயிற்சியில் தீவிரமாக பங்கேற்றனர். சி, ஜாவா மற்றும் பைதான் நிரலாக்க மொழிக்கான மென்பொருளை நிறுவுவதன் மூலம் பயிற்சியின் முதல் அமர்வு தொடங்கியது. இரண்டாவது அமர்வில், வைரஸ் தடுப்பு மென்பொருளை நிறுவுவது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மூன்றாவது அமர்வில், கோப்பு மாற்றி மற்றும் கோப்பு சுருக்க நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியை வழங்கிய பின்னர் பயிற்சியாளரின் வழிகாட்டுதலின் கீழ் மாணவர்கள் நடைமுறை அமர்வுகளில் பங்கேற்கச் செய்யப்பட்டனர். கூகுள் படிவங்கள், கூகுள் ஸ்லைடுகள் மற்றும் கூகுள் தாள்களை உருவாக்குவதற்கு கூகுள் கருவிகளில் ஐந்தாவது அமர்வு பயிற்சி அளிக்கப்படுகிறது. இயக்க முறைமையை நிறுவுவது பற்றிய இறுதி அமர்வு பயிற்சி. அமர்வு மதிப்பீட்டின் முடிவில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இப்பயிற்சியை துறை தலைவர் முனைவர் அனிதா வழிகாட்டுதலின் பேரில் உதவி பேராசிரியர் பூர்ணம் அளித்தார்





முதலாம் ஆண்டு செயற்கை அறிவியல் துறை மாணவர்களுக்கு ஆய்வகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது.

# தேசிய சாம்பியன் போட்டிக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு!



கணினித்துறை இயக்குநர் முகமது சாதிக் உரையாற்றினார்

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி யில் தொழில்முனைவோர் தேசிய அளவிலான எம்.எஸ். எம்.இ சாம்பியன் போட்டிக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. மத்திய அரசு அதிகாரி ஜெரினா பபி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்

இதில் நெல்லை, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பகுதியில் இருந்து ஏராள மானவர்கள் கலந்து கொண்டனர்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூ ரியில் மத்திய அமைச் சகத்தின் எம்.எஸ்.எம்.இ (MSME) நிறுவனம் நெல்லை வண்ணார்ப்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூ ரிக்கு ஹோஸ்ட் இன்ஸ்டி டியூஷன் (Host Institution) அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

இந்த அங்கீகாரத்தின் மூலம் கல்லூரியில் படிக்கும் மாண வர்கள், பேராசிரியர்கள் மற்றும் பொதுமக்களும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங் களின் யோசனைகளை தகுதி யான, புதிய கண்டு பிடிப்புகளை உருவாக்குவதற்கு இந்த அங்கீ காரம் பயனுள்ளதாக இருக் கிறது. இது தொடர்பான விழிப் புணர்வு கருத்தரங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்லூரி யின் தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன் வரவவேற்புரையாற்றினார்.

நெல்லை எம்.எஸ்.எம்.இ உதவி இயக்குநர் ஜெரினாபபி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். அவருக்கு கணினித்துறை இயக்குநர் முகமது சாதிக் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசினை வழங்கினார். மத்திய அரசு அதிகாரி ஜெரினாபபி பேசுகையில், வெளிநாடுகளில் இருந்து தொழில் நுட்பங்களை பெறு வதை தவிர்த்து, உள் நாட்டி லேயே புதிய கண்டுபிடிப்பு யோசனைகளை கண்டுபிடிப்ப தற்கு திய அரசு ஊக்குவித்து வருகிறது. விவசாயம், ஹெல்த் மற்றும் பல்வேறு துறைகளில் மாணவர்கள் புதிய கண்டு பிடிப்பு யோசனைகளை வழங்க வேண்டும். இதற்காக மத்திய அரசு மானியம் வழங்குகிறது. 4 ஆண்டுகள் கல்லூரியில் படிக்கும்போதே தொழில் முனைவராக வெற்றி பெறுவதற்கு கல்லூரியிலேத்யே ஹோஸ்ட் இன்ஸ்டிடியூஷன் தொடங்கப்பட்டுள்ளது. தேசிய அளவிலான ஹேக்கத்தான் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றுள்ளீர்கள். அதற்காக எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி நிர்வாக செயல்பாட்டை பாராட்டு கிறேன். எனவே, மாணவர்கள் இந்த நல்ல வாய்ப்பை பயன் படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இக்கருத்தரங்கிற்கான ஏற்பா டுகளை கல்லூரி முதல் வர் முனைவர் V.வேல் முருகன் வழி காட்டுதலின் பேரில் தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபால ராயன் இன்குபேஷன் மைய பொறுப் பாளர் முனைவர், லட்சுமி நாராயணன், ஒருங்கிணைப் பாளர் முனைவர் பிரேம் ஆனந்த் ஆகியோர் செய்திருந்தனர்.

இதில் நெல்லை, தூத்துக்குடி, மதுரை உள்ளிட்ட பகுதியில் இருந்து ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

FRANCIS XAVIER ENGINEERING COLLEGE
AN AUTONOMOUS INSTITUTION
Vannarpettai, Tirunelveli
இதழ் -8
THE FXEC TIMES
நவம்பர் 2022

# ஸ்டார்ட்அப் ஹேக்கத்தான் போட்டி: எப்.எக்ஸ். கல்லூரி முதலிடத்தை வென்று சாதனை!

## நெல்லை உதவி ஆட்சியர் கோகுல் ஐ.ஏ.எஸ் பாராட்டு!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஹேக்கத்தான் போட்டியில் முதல் பரிசை வென்று சாதனை படைத்தனர். அவர்களை நெல்லை உதவி ஆட்சியர் கோகுல், ஐ.ஏ.எஸ். பாராட்டினார்.

மதுரையில் கூகுள் டெவலப்பர் குழுமத்துடன் இணைந்து ஸ்டார்ட் அப் திருநெல்வேலி மண்டல மையம் நடத்திய ஹேக்கத்தான் போட்டியில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

இதில் 600 கண்டுபிடிப்பு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டு. அதில் 161 யோசனைகள் பட்டியலிடப்பட்டு 28 குழுக்களாக உருவாக்கப்பட்டன. இந்த ஹேக்கத்தான் போட்டியில் பங்கேற்ற 28 அணிகளில், எம்.தர்ஷினி (III-CSE), அபிராமி (II-AI&DS), கிளாட்ஸ்டன் ஆகாஷ் ராஜா (II-AI&DS), மாரிசெல்வம், (II-AI&DS), விஜய் (II-AI&DS) ஆகியோர் அடங்கிய குழு ஆகியோர் செயற்கை நுண்ணறிவு சார்ந்த தயாரிப்பு மேம்பாடு மற்றும் தொடக்க யோசனைக்காக முதல் பரிசை வென்றனர்.

இதில் வெற்றி பெற்ற குழுவினருக்கு கூகுள் டெவலப்பர் சமூகம் மற்றும் ஸ்டார்ட்அப்பின் மூலம் ரூ.35000/- தொடக்க விதை மானியம் வெகுமதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரில் உள்ள கூகுள் கார்ப்பரேட் அலுவலகத்தில் நடைபெறும் கிராண்ட் ஃபைனாலுக்கான பட்டியலிலும் இந்த அணி இடம் பெற்றுள்ளது.

செயற்கை நுண்ணறிவு துறை தலைவர் முனைவர் A.அனிதா இந்த திட்டத்திற்கு ஆலோசகராக செயல்பட்டுள்ளார்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவர் குழுவினரை திருநெல்வேலி மாவட்ட உதவி ஆட்சியர் கோகுல் ஐ.ஏ.எஸ். பாராட்டினார். மேலும், திருநெல்வேலி மண்டல மைய ஸ்டார்ட் அப் திட்டத் தலைவர் ராகுல் அவர்களுடன் மாணவர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அவர் ஸ்டார்ட்அப் ஆர்வலர்கள் தங்களது வணிக யோசனையை சமூக நல வணிக மாதிரியாக மாற்றுவது குறித்து உரையாற்றினார்.

சந்தை சாத்தியம், பயன்பாடு மற்றும் ஊனமுற்ற சமூகத்திற்கான யோசனையின் தேவை ஆகியவற்றைக் கண்டறிவதற்காகக் குழு களப் பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மாணவர்களின் கண்டுபிடிப்பு யோசனையின் நோக்கம் குறித்து கள நிபுணர் மற்றும் அரசு அதிகாரிகளுடன் விவாதிக் கப்பட்டது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர் குழு மற்றும் பேராசிரி யர்களையும், ஊக்கம் அளித்த பொது மேலாளர்கள் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், முதல்வர் முனைவர் V.வேல்முருகன், கணினித்துறை இயக்குநர் முகமது சாதிக் ஆகி யோரையும் ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்



ஸ்டார்ட் அப் ஹேக்கத்தோன் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களை உதவி ஆட்சியர் பாராட்டினார்.



முதல் பரிசு பெற்ற மாணவர்கள்

# ஐ.பி.எம் ஹேக் சேலஞ்ச் 2022 போட்டி: எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி சிறப்பிடம்!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி ஐபிஎம் ஹேக் சேலஞ்ச்-2022 போட்டியில் பங்கேற்று சிறந்த கல்வி நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எம் ஹேக் சேலஞ்ச் 2022 (IBM Hack Challenge 2022) என்பது தொழில்நுட்பக் கற்றல், சமூகத்தைப் பாதிக்கும் பிரச்ச னைகளுக்கான தீர்வுகள் மற்றும் பாடப்பொருள் மற்றும் திறன் குழுக்களுக்கான அணுகுமுறை ஆகியவற்றால் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த சேலஞ்ச் போட்டி ரெட் ஹட் ஓபன் ஷிப்ட், அறிவாற்றல் கம்ப்யூட்டிங் என்பது மனித மூளை செயல்படும் விதத்தை கணினிகள் பிரதிபலிக்கும் முயற்சியாகும். இதை நிறை வேற்ற, அறிவாற்றல் கம்ப்யூட்டிங் செயற்கை நுண்ணறிவு, சைபர் செக்யூரிட்டி மற்றும் டேட்டா சயின்ஸ் அண்ட் அனலிடிக்ஸ் ஆகியவற்றைப் பயன்படுத்தி, சிறந்த உலகத்தை நெகிழ் சியுடன் வடிவமைக்கும் தீர்வுகளை உள்ளடக்கியது



பெங்களூருவில் ஐ.பி.எம் ஹேக் சேலஞ்ச் 2022 போட்டியானது அகில இந்திய தொழில் நுட்ப கவுன்சில் மற்றும் ஸ்மார்ட் இன்டென்ஸ் (Smart Intenz) உடன் இணைந்து நடத்தப்பட்டது. இதில்நெல்லை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் பயன்பாட்டு ஆய்வ கங்களில் (applied labs) இருந்து 75 க்கும் மேற்பட்ட மாணவர்கள் நிகழ்வைப் பதிவு செய்தனர். மேலும் ஐடியேஷன் இண்ட ஸ்ட்ரியல் அப்ளைடு ஆய்வகத் திலிருந்து 2 அணிகளும் . இறுதி மூன்றாம் சுற்று மதிப்பீட்டில் பங்கேற்று, அவர்கள் சிறந்த செயல்திறன் கொண்ட குழுவாக சிறப்பாக செயல் பட்டனர்.இப்போட்டி மூலம் சிறந்த நிறுவ னங்களில் ஒன்றாக எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி பட்டியலிடப்பட்டுள்ளது. இதற்கான பாராட்டு கேடயத்தை முனைவர் லட்சுமி நாராயணன் பெற்றுக் கொண்டார். கல்லூரி மாணவர் களின் சிறந்த வழி காட்டிகளில் ஒருவராக ஐ.டி துறை லட்சுமி செயல்பட்டார். இப்போட்டியில் பங்கேற்ற மாண வர்கள் மற்றும் பேராசிரியர்களை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் அருண்பாபு, பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன், கணினித்துறை இயக்குநர் முனைவர் முகமது சாதிக் ஆகியோர் பாராட்டி னார்கள்

# மெக்கானிக்கல் பொறியியல் துறை மாணவர்களுக்கு தாரங்கதாரா கெமிக்கல் ஆலை, அனல்மின் நிலையத்தில் பார்வை!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மெக்கானிக்கல் பொறியியல் துறை மாணவர்களுக்கு தாரங்க தாரா கெமிக்கல் ஆலை, அனல் மின் நிலையம் ஆகியவற்றில் நேரடி பார்வை அளிக்கப்பட்டது.

பிரான்சிஸ் சேவியர் இன்ஜினியரிங் கல்லூரியின் மெக்கானிக்கல் துறையைச் சேர்ந்த 44 மூன்றாம் ஆண்டு மாணவர்கள் மற்றும் இரண்டு பாடப்பிரிவுகள் கொண்ட ஒரு குழு தூத்துக்குடியில் உள்ள "தரங்கதாரா கெமிக்கல் ஒர்க்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு நேரடியாக அழைத்துச் செல்லப் பட்டனர்.



தாரங்கதாரா கெமிக்கல் ஆலையில் நேரடி பார்வை

அங்கு காஸ்டிக் சோடா, திரவ குளோரின், ட்ரைக்ளோரோ எத்திலீன், ஹைட்ரோகுளோரிக் அமிலம், செயற்கை ரூட்டில், மஞ்சள் இரும்பு ஆக்சைடு, யூடோக்ஸ் ஃபெரிக் குளோரைடு மற்றும் பிவிசி ரெசின் ஆகியவற்றிலிருந்து ஏற்று மதிக்கு தரமான இரசாயன தயாரிப்புகளை செய்து வருகிறது. இதனை தவிர, தொழில்சாலையில் 150,000 TPA தொழில்துறை உப்பை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனம் 36 மெகாவாட் உலை எண்ணெய் அடிப்படையிலான கேப்டிவ் பவர் பிளாண்ட் மற்றும் 58.3 மெகாவாட் நிலக்கரி அடிப் படையிலான கோஜென் ஆலை யையும் நடத்துகிறது,

ஏனெனில், இது ஆற்றல் மிகுந்த உற்பத்தி செயல் முறைகளைக் கொண்டுள்ளது. பி.வி.சி ரெசின் தயாரிப்பில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருளான வினைல் குளோ ரைடு மோனோமரை சேமிப்பதற்காக தூத்துக்குடி துறைமுகத்திற்கு அருகில் தாரங்கதாரா நிறுவனம் நிறுவப் பட்டுள்ளது. மாணவர்களுக்கு தொழிற் சாலை, பொருட்கள் மற்றும் அங்குள்ள வசதிகள் குறித்து விரிவுரை வழங்கப்பட்டது. பின்னர் வழி காட்டுதல் குழுவினர் காஸ்டிக் சோடா ஆலையின் அனைத்து பிரிவுகளுக்கு அழைத்துச்



தூத்துக்குடி அனல்மின்நிலையத்தில் பயிற்சி மேற்கொண்ட மாணவர்கள்.

அனைத்து அமைப்புகளுடன் கூடிய 58.3 மெகாவாட் நிலக்கரி மூலம் இயங்கும் கோஜென ரேஷன் ஆலையை மாண வர் குழுவினர் ஆர்வத்துடன் பார்வை யிட்டனர். இந்தோ னேசிய பிட்மினஸ் நிலக்கரி, ஆற்றல் மற்றும் செயல்முறை வெப்பம் ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்யும் கோஜெனரேஷன் ஆலைக்கு எரிபொருளாகப் பயன் படுத்தப் படுகிறது. முழு ஆலை மற்றும்

அதன் இயந்திரங்களின் செயல்பாடுகளை மாணவர்கள் வியப்புடன் பார்வையிட்டனர். இதனையடுத்து, மாணவர்கள் குழு தூத்துக்குடி "தூத்துக்குடி அனல் மின் நிலையதுக்கு அழைத்து செல்லப்பட்டனர். இது நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையமாகும். தமிழ்நாடு, தூத்துக்குடி துறைமுகம் அருகே உள்ள இதன் முதல் அலகு 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது, தற்போது 5 ட அலகுகள் 1,050 மெகாவாட் (5 x 210 மெகாவாட்) நிறுவப்பட்டு 160 ஹெக்டேர் பரப்பளவில் பரவியுள்ளது. இந்த ஆலையில் மேற்கு வங்கம், பீகார், ஒரிசா நிலக்க வயல்களில் இருந்து கொள் முதல் செய்யப்பட்ட பிட்மினஸ் நிலக்கரி மற்றும் இந்தோ னேசியா மற்றும் ரஷ்யாவில் இருந்து இறக்குமதி செய்யப் பட்ட நிலக்கரி பயன் படுத்தப் படுகிறது. இந்த நிலக்கரி ஹல்டியா, பரதீப், விசாகப் பட்டினம் துறை முகத்தில் இருந்து கப்பல் மூலம் கடல் வழியாக டிடிபிஎஸ்க்கு கொண்டு செல்லப் படுகிறது. மேலும் இயக்க அளவுருக்கள் ஆலையின் வழிகாட்டுதல் குழு மூலம் மாணவர்கள் குழு கொதிகலன் இல்லத்தில் இருந்து தூள், கன்வேயர், சாம்பல் கையாளும் அமைப் புகள், தூசி சேகரிப்பான்கள், பெரிய பம்புகள் கொண்தீவன நீர் சுத்திகரிப்பு அலகு, தேவை யான ஆட்சி அமைப் புகளுடன் கூடிய விசையாழி, மின் தேக்கிகள், குளிரூட்டும் கோபுரங்கள், அடுக்குகள் என அனைத்து அமைப்புகளும் துணை அமைப்புகளுக்கும் அழைத்து செல்லப்பட்டு காண்பிக்கப்பட்டன.

அமைக்கப்பட்டு, செயல் முறைகளின் முன்னேற்றம் தொலை நிலையில் கண் காணிக்கப் படுவதால், கட்டுப் பாட்டு அறையைப் பார்வை யிட்டனர். இயந்திரங்கள் மற்றும் செயல் முறைகளை உண்மையான நேரத்தில் பார்ப்பது விரிவானது. தூத்துக்குடியில் உள்ள இந்த அனல்மின் நிலையத்தின் முக்கிய நன்மை என்ன வென்றால், தூத்துக்குடி வளைகுடா அமைதியானது மற்றும் சூறாவளி தாக்கங்கள் இல்லாதது மற்றும் ஆண்டு முழுவதும் நிலக்கரி போக்குவரத்து மற்றும் கடலில் இருந்து குளிர்ந்த நீரை எந்த பிரச் சனையும் இல்லாமல் எடுக்க உதவுகிறது. இந்த இரண்டு ஆலை களின் நேரடி பயிற்சி மாணவர்களுக்கு பேருதவியாக இருந்தது.

இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் முனைவர் வேல் முருகன் வழி காட்டுதலின் பேரில் இயந்திரவியல் பேராசிரியர் சாமுவேல் ஹேன்சன், பேராசி ரியர் ஜீனத்துல் பரீடா அப்துல் கனி மற்றும் பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## முதலாண்டு மாணவர்களுக்கு அடிப்படை திறன் பயிற்சி



மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி முதல் ஆண்டு மாணவர்களின் நலனுக்காக பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு மையம் சார்பாக, தினமும் அனைத்து துறையிலும் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. "LCD ப்ரொஜெக்டர் - மேன்ட்லிங் மற்றும் டிமாண்ட்லிங்" மற்றும் திறமைக்கான செயல்பாட்டுக் குறியீடுகளை பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. கணினித்துறை உதவி பேராசிரியர் பாக்யா லக்ஷ்மி மற்றும் திறன் பயிற்சியாளர் முகேஷ் கிருஷ்ணன் ஆகியோர் எல்.சி.டி ப்ரொஜெக்டரை நிறுவுதல், எல்.சி.டி புரொஜெக்டரின் பாகங்கள், செயல்பாடுகள், பராமரிப்பு மற்றும் சரிசெய்தல் குறித்து அமர்வு நடைபெற்றது.

இதில் அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கேற்று எல்சிடி புரொஜெக்டரை கையாள்வதும், பிரித்தெடுக்கவும் கற்றுக் கொண்டனர். இப்பயிற்சியில் முதலாம் ஆண்டு எலக்ட்ரிக்கல்ஸ் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் பிரிவில் இருந்து 20 மாணவர்களும், மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பிரிவில் 12 மாணவர்களும் படித்துள்ளனர். கல்லூரி முதல்வர் வழிகாட்டுதலின்பேரில் திறன் பயிற்சி துறை டீன் பாலாஜி ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## அண்ணா பல்கலைக்கழக விளையாட்டு போட்டி: கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசு!

நெல்லை வண்ணார்பேட்டை பொறியியல் கல்லூரி மாண வர்கள் கல்லூரிகளுக் கிடையே நடந்த பல்வேறு விளையாட்டு போட்டியில் முதல் பரிசு வென்று சாதனை படைத்து ள்ளனர்.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் விளையாட்டுத்துறை சார்பில் மாணவர்கள் விளை யாட்டு போட்டிகளில் பங்கேற்க ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் தேசிய அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று சாதனை படைத்து வருகின்றனர்.

இதனிடையே, அண்ணா பல்கலைக்கழகம் விளையாட்டு கழகம் (மண்டலம்-18) சார்பில் பொறியியல் கல்லூரிகளுக்கு இடையேயான கூடைப்பந்து, வாலிபால், கால்பந்து, இறகு பந்து உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. அதில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் ஆண்கள் பிரிவில் மேஜை பந்தாட்ட போட்டியில் முதலிடமும், பெண்கள் பிரிவில் பேட்மின்டன் போட்டியில் முதலிடமும், ஆண்கள் கால்பந்து பிரிவில் முதலிடமும், ஆண்கள் வாலிபால் பிரிவில் 2ம் இடமும், பெண்கள் பிரிவில் கூடை பந்து போட்டியில் 2ம் இடம் பெற்று சாதனை பெற்றுள்ளனர்.



விளையாட்டு துறையில் வெற்றிபெற்ற மாணவர்கள்





இப்போட்டியில் வெற்றி பெற்ற எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவ, மாணவியருக்கு 18வது மண்டல அதிகாரிகள் பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவித்தனர்.

இப்போட்டியில் வெற்றிபெற ஊக்கம் அளித்த பொது மேலாளர்கள் K. ஜெயக்குமார் , S. கிருஷ்ண குமார், கல்லூரி முதல்வர் முனைவர் V வேல்முருகன் மற்றும் உடற்கல்வி இயக்குநர்கள் சுரேஷ்குமார், சாமுவேல் அமர்நாத், நந்தினி மற்றும் வெற்றி பெற்ற மாணவர் களையும் ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண்பாபு ஆகியோர் பாராட்டினர்.